# 22-12-2024 செய்தி

## செறிவூட்டப்பட்ட அரிசிக்கு ஜிஎஸ்டி குறைப்பு

**மரபணு சிகிச்சைக்கு விலக்கு**

- செறிவூட்டப்பட்ட அரிசி வித்துகளையும், வழக்கமான அரிசியையும் ஒன்றுசேர்த்து செறிவூட்டப்பட்ட அரிசி தயாரிக்கப்படுகிறது.
- பி-காம்பிளக்ஸ் வைட்டமின்கள், இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம் உள்ளிட்ட நுண்ணூட்டச் சத்துகள் செறிவூட்டப்பட்ட அரிசியில் இடம்பெற்றுள்ளன.
- இந்நிலையில் 55-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில், செறிவூட்டப்பட்ட அரிசி வித்துகளுக்கான ஜிஎஸ்டி விகிதத்தை 5 சதவீதமாக குறைக்க வேண்டும்.
- ஜிஎஸ்டியில் இருந்து மரபணு சிகிச்சைக்கு விலக்களிக்க வேண்டும். வணிக ஏற்றுமதியாளர்களுக்கு விநியோகிக்கும் சரக்குகளுக்கு இழப்பீட்டு செஸ் வரியை 0.1 சதவீதமாக குறைக்க வேண்டும் என்று ஜிஎஸ்டி கவுன்சில் பரிந்துரைத்தது.

**பாப்பார்னுக்கு 12% வரி**

- உப்பு மற்றும் மசாலா சேர்க்கப்படாத பாப்கார்ன் பாக்கெட்டில் அடைக்கப்படவில்லை என்றால், அதற்கு 5 சதவீதம் ஜிஎஸ்டியும், பாக்கெட்டில் அடைக்கப்பட்டிருந்தால் அதற்கு 12 சதவீத ஜிஎஸ்டியும், சர்க்கரை கலந்த பாப்கார்னுக்கு 18 சதவீத ஜிஎஸ்டியும் விதிக்கப்படும் என்று கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டது.

**பழைய வாகனங்களுக்கு 18% ஜிஎஸ்டி**

- மின்சார வாகனங்கள் உள்பட அனைத்து பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட வாகன விற்பனைக்கான ஜிஎஸ்டியை 12 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்று அந்த கவுன்சில் பரிந்துரைத்தது.
- மூன்றாம் தரப்பு வாகன காப்பீட்டுத் தவணைத் தொகையில் இருந்து மோட்டார் வாகன விபத்து நிதிக்கு பொது காப்பீட்டு நிறுவனங்கள் அளிக்கும் பங்களிப்புக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்களிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது.

## ஐ.நா. சர்வதேச நீதி கவுன்சிலின் தலைவராக முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி மதன் லோகுர் நியமனம்

- ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் புகழ்பெற்ற சட்ட வல்லுநர்களை உள்ளடக்கிய ஐ.நா.வின் சர்வதேச நீதி கவுன்சிலின் தலைவராக இந்தியாவின் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி மதன் பி லோகுர் நியமிக்கப்பட்டார்.
- அவரது இந்தப் பதவிக்காலம் நவம்பர் 12, 2028-ஆம் ஆண்டுடன் முடிவடையும்.
- கவுன்சிலின் மற்ற உறுப்பினர்கள் : ஊழியர்களால் பரிந்துரைக்கப்பட்ட புகழ்பெற்ற சட்ட வல்லுநர் கார்மென் ஆர்டி காஸ் (உருகுவே); நிர்வாகத்தால் பரிந்துரைக்கப்பட்ட புகழ்பெற்ற சட்ட வல்லுநர் ரோசாலி பால்கின் (ஆஸ்திரேலியா); ஊழியர் பிரதிநிதி ஸ்டீபன் பிரெஜினா (ஆஸ்திரியா); மற்றும் நிர்வாக பிரதிநிதி ஜே போஜெனெல் (அமெரிக்கா) என செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது.

## 2 ஆண்டுகளில் இந்திய வனப்பகுதி 1,445 சதுர கி.மீ. அதிகரிப்பு

- மத்தியஅரசின் இந்திய வன ஆய்வு (எஃப்எஸ்ஐ) நிறுவனம் 1987-ஆம் ஆண்டு முதல் காடுகளின் பரப்பளவையும், 2001-ஆம் ஆண்டு முதல் மரங்களின் பரப்பளவையும் கணக்கிட்டு வருகிறது.
- அந்த வகையில் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட 2023-ஆம் ஆண்டுக்கான இந்திய வன அறிக்கையின்படி, நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் வனம் மற்றும் மரங்களின் பரப்பு 25.17 சதவீதத்தை எட்டியுள்ளது. மேலும், 2005-ஆம் ஆண்டிலிருந்து கூடுதலாக 229 கோடி டன் கரியமிலவாயு உமிழ்வை உறிஞ்சும் திறனை தேசம் அடைந்துள்ளதும் தெரியவந்தது.
- பாரீஸ் ஒப்பந்த இலக்குகளை அடைவதற்கான பருவநிலை திட்டங்களின் ஒரு பகுதியாக, 2030-ஆம் ஆண்டுக்குள் வனப்பரப்பு விரிவாக்கம் மூலம் கூடுதல் 250 முதல் 300 கோடி டன் கரியமிலவாயு உமிழ்வை உறிஞ்சும் திறனை அடைய நாடு உறுதியளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- **25.17 சதவீதம் :** நாட்டில் காடுகளின் பரப்பளவு 2021-ஆம் ஆண்டின் 7,13,789 சதுர கிலோமீட்டரிலிருந்து 2023-இல் 7,15,343 சதுர கிலோமீட்டராக அதிகரித்து, தேசத்தின் மொத்த புவியியல் பரப்பில் 21.76 சதவீதத்தை எட்டியுள்ளது.
- மரங்களின் பரப்பளவு 1,289 சதுர கி.மீ அதிகரித்து, புவியியல் பரப்பில் 3.41 சதவீதமாக உள்ளது.

- ஒட்டுமொத்தமாக, வனம் மற்றும் மரங்களின் ஒருங்கிணைந்த பரப்பளவு 1,445 சதுர கி.மீ அதிகரித்து, புவியியல் பரப்பில் 25.17 சதவீதமாக அதாவது 8,27,357 சதுர கி.மீ–ஆக உள்ளது.
- 1988–ஆம் ஆண்டு தேசிய வனக்கொள்கையின்படி, இந்தியாவின் புவியியல் பரப்பில் 33 சதவீதம் வனம் அல்லது மரங்களின் கீழ் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது.
- **மாநிலங்கள் வாரியாக.....:** ஒருங்கிணைந்த 1,445 சதுர கி.மீ. அதிகரிப்பில் சத்தீஸ்கர் (684 சதுர கி.மீ), உத்தர பிரதேசம் (559 சதுர கி.மீ.), ஒடிஸா (559 சதுர கி.மீ.), ராஜஸ்தான் (394 சதுர கி.மீ.) ஆகிய மாநிலங்கள் அதிகம் பங்காற்றியுள்ளன.
- குறிப்பாக, காடுகளின் பரப்பில் மிஸோரம் (242 சதுர கி.மீ.), குஜராத் (180 சதுர கி.மீ.), ஒடிஸாவில் (152 சதுர கி.மீ.) ஆகிய மாநிலங்களில் அதிகரிப்பு காணப்படுகிறது.
- **பிராந்தியங்கள் வாரியாக ....** : நாட்டின் மலைப்பிரதேச மாவட்டங்களில், 234.14 சதுர கி.மீ. வனப்பரப்பு அதிகரித்து, மொத்த பரப்பளவு 2,83,713.20 சதுர கி.மீ–ஆக உள்ளது. இந்த மாவட்டங்களின் புவியியல் பரப்பில் இது 40 சதவீதமாகும்.
- வடகிழக்கு பிராந்தியத்தில் 327.30 சதுர கி.மீ வனப்பரப்பு குறைந்து, மொத்த பரப்பளவு 1,74,394,70 சதுர கி.மீ–ஆக உள்ளது. பிராந்தியத்தின் புவியியல் பரப்பில் இது 67 சதவீதமாகும்.
- இந்தியாவின் மூங்கில் காடுகளின் பரப்பளவு 2021–ஆம் ஆண்டிலிருந்து 5,227 சதுர கி.மீ அதிகரித்து, 1,54,670 சதுர கி.மீ.–ஆகவும் சதுப்பு நில காடுகளின் பரப்பளவு 7.43 சதுர கி.மீ. குறைந்து, 4,991.68 சதுர கி.மீ.–ஆகவும் உள்ளது.
- **ம.பி.முதலிடம் :** நாட்டில் வனம் மற்றும் மரங்களின் ஒருங்கிணைந்த பரப்பில் மத்திய பிரதேசம் (85,724 சதுர கி.மீ.), அருணாச்சல பிரதேசம் (67,083 சதுர கி.மீ.) மகாராஷ்டிரம் (65,383 சதுர கி.மீ.) ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.
- குறிப்பாக, காடுகளின் பரப்பில் மத்திய பிரதேசம் (77,073 சதுர கி.மீ.) முதலிடத்திலும், தொடர்ந்து அருணாச்சல பிரதேசம் (65,882 சதுர கி.மீ.), சத்தீஸ்கர் (55,812 சதுர கி.மீ.) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்தும் உள்ளன.
- புவியியல் பரப்பளவுடன் ஒப்பிட்டு காடுகளின் பரப்பைக் கருத்தில் கொள்ளும்போது, லட்சத்தீவுகள் (91.33 சதவீதம்) முதலிடத்திலும், மிஸோரம் (85.34 சதவீதம்) அந்தமான் & நிக்கோபார் தீவுகள் (81.62 சதவீதம்) அடுத்தடுத்தும் உள்ளன.
- **கிழக்கில் வனப்பகுதி இழப்பு :** கடந்த பத்தாண்டுகளில், மேற்கு தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக 58.22 சதுர கி.மீ. வனப்பரப்பு குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.
- இதே காலகட்டத்தில், மிகவும் அடர்ந்த காடுகளின் பரப்பு 3,465.12 சதுர கி.மீ. அதிகரித்துள்ளது. மிதமான அடர்ந்த காடுகள் மற்றும் திறந்தவெளி காடுகளின் பரப்பு முறையே 1,043.23 சதுர கி.மீ. மற்றும் 2,480.11 சதுர கி.மீ குறைந்துள்ளன.

## முக்கிய முடிவுகள்

| பொருள் / சேவை | இதுவரை | இனி |
|---|---|---|
| மசாலா பாப்கார்ன் | 5 | 5 |
| பிராண்டட் பாப்கார்ன் | 12 | 12 |
| கேரமல் இனிப்பு பாப்கார்ன் | 12 | 18 |
| **ஆடை ரகங்கள்** | | |
| ரூ. 1,000 வரை | 9 | 9+ |
| ரூ. 1,500 – 10,000 வரை | 12 | 18 |
| ரூ.10,000க்கு மேல் | 12 | 28 |
| பழைய வாகன விற்பனை | 12 | 18 |
| (நிறுவனங்களுக்கு மட்டும்) | | |
| ஷு – ரூ.15,000க்கு மேல் | 18 | 28 |
| கைக்கடிகாரம் – ரூ.25,000க்கு மேல் | 18 | 28 |
| செறிவூட்டப்பட்ட அரிசி | 18 | 5 |
| குடிநீர் – 20 லிட்டர் கேன் | 18 | 5 |
| பயிற்சி நோட்டுப் புத்தகம் | 12 | 4 |
| சைக்கிள் – ரூ.10,000க்குள் | 12 | 4 |
| ஏ.சி.சி.கான்கிரீட் | 18 | 12 |